**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 06 ம் நாள்

**இடைநிலை மனு எண். 235/2022 -ல்**

**அசல் வழக்கு எண். 69/2022**

ஜெகநாதன் .... மனுதாரர்/வாதி

**// எதிர்//**

1. புஷ்பநாதன்

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO), மன்னார்குடி.

3. தமிழ்நாடு அரசுக்காக அதன்
மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது தாவா சொத்தில் மனுதாரரின் அனுமதியில்லாமல் மனுதாரரின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஓர் ஒருதலைபட்ச இடைக்கால உத்தரவு வழங்கி பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். தாவா சொத்து மனுதாரரது தகப்பனாரான பொதியப்பன் அவர்களால் கடந்த 05.07.2000 ம் ஆண்டு கிரயம் பெறப்பட்டது என்றும், அது முதல் மனுதாரரது தகப்பனாரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்தது என்று தெரிவிக்கிறார். மனுதாரரது தகப்பனார் கடந்த 2005 ல் இறந்து விட்டார் என்றும், அவரது இறப்பு சான்றிதழ் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறார். மனுதாரரது தகப்பனாருக்கு மனுதாரர் மற்றும் மனுதாரரது சகோதரர் வடிவேல் மற்றும் ராமலிங்கம், மனுதாரரது சகோதரிகள் பிரேமாவதி, வள்ளியம்மை, ராமமிர்தம் ஆகியோர் வாரிசுதாரர் ஆவார்கள். மேற்படி பொதியப்பன் என்பவரின் வாரிசு என்ற அடிப்படையிலும் தாவா சொத்தை பொறுத்து மனுதாரர் பாகஸ்தர் என்ற முறையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய உரிமை உள்ளது என்ற வகையிலும் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரரது தகப்பனார் இறப்பிற்கு பிறது மனுதாரரது தகப்பனாரின் சட்டப்பூர்வ வாரிசு என்ற அடிப்படையில் மனுதாரர் நாளது தேதி வரை தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறேன் என்றும், மனுதாரர் வேலை நிமித்தமாக வெளியூர் சென்று வருவதை அனுகூலமாக பயன்படுத்திக் கொண்டு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் அரசு உதவியுடன் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்ட முயற்சித்து வருகிறார் என்றும் தெரிவிக்கிறார். மேற்படி மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரிடம் மனுதாரரது தாவா சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என்றும், தாவா சொத்தில் மனுதாரர்கள் அத்துமீறி உள்ளே நுழைந்து வீடு கட்ட முயற்சிப்பது சட்டப்படி தவறானது என்றும் கூறி 1ம் எதிர்மனுதாரரின்

செயல்களை தடுக்க முயன்றபோது மேற்படி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரை நீ ஒரு சாதாரண மனிதன் என்றும், உன்னால் என்னை என்ன செய்ய முடியும் என்றும் மனுதாரரிடம் தாவா சொத்தில் நான் எப்படியேனும் வீடு கட்டியே தீருவேன் என்றும் உன்னால் முடிந்ததை செய்துகொள் என்றும் மனுதாரரை கடந்த 16.06.2022 ம் தேதியன்று மிரட்டினார் என்றும் தெரிவிக்கிறார்.

மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் செயல்களை அக்கம்பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்திவிட்டேன்என்றும், 1ம் எதிர்மனுதாரரின் மேற்படி செயல் குறித்து கடந்த 16.06.2022 ம் தேதியன்று திருமக்கோட்டை காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுக்க சென்றபோது மேற்படி காவல் துறையினர் மனுதாரரது புகாரை வாங்க மறுத்ததோடு தாவா சொத்தை பொறுத்து பிரச்சனையை நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளுமாறு மனுதாரரை திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கிறார். தாவா சொத்து மனுதாரரது தகப்பனாருக்கு சொந்தமானது என்பதற்கு ஆதரவாக பட்டா ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் கண்ட சங்கதிகளையும் இவ்வழக்குரையின் ஓர் பாகமாக பாவித்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறார்.

தாவா சொத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்மந்தமோ உரிமையோ இல்லை என்று தெரிவிக்கிறார். மோசடியாக 1ம் எதிர்மனுதாரர் அரசு உதவியுடன் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்ட முயற்சி செய்து வருவதால் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் அவசிய தரப்பினர்கள் என்ற வகையில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் 2ம் எதிர்மனுதாரரின் உயர் அதிகாரி என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இவ்ழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எதிர்மனுதாரர்களிடம் மனுதாரர் யாதொரு பரிகாரமும் கோரவில்லை என்றும் தெரிவிக்கிறார். 2, 3 எதிர்மனுதாரர்கள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்களுகது மனுதாரர்

கொடுக்க வேண்டிய 80(2)ன் கீழான அறிவிப்பு கொடுக்காததை மன்னித்து டிஸ்பென்ஸ் செய்யக்கோரி தனி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 1ம் எதிர்மனுதாரரின் செயலை நீதிமன்ற உத்தரவில்லாமல் தடுத்து நிறுத்துவது என்பது இயலாத காரியம். எனவே எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்தில் வாதி அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக்கூடாது என ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே தாவா சொத்தில் மனுதாரரின் அனுமதியில்லாமல் மனுதாரரின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஓர் ஒருதலைபட்ச இடைக்கால உத்தரவு வழங்கி பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:-

மனுதாரரின் மனு சரியல்ல. சட்டப்படி நிலைநிற்க தக்கதல்ல. மனு விவரங்களை இந்த 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். மனுதாரரே மனுவை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இந்த மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் மீது அசல் வழக்கு எண்.19/2019 என வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த மனுவில்தான் எதிர்மனுதாரரிடம் கிரயம் வாங்கிய சொத்து சர்வே நம்பர் 201/D5 என கிரயம் பெற்றுள்ளதாகவும், அதன் சர்வே நம்பர் 201/1 D5 என விளம்புகை செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அவர் கிரயம் பெற்றது 201/ D5 அல்லது 201/1 D5 என்பது குறித்து விசாரணை முடிந்து தீர்ப்பு ஏற்படாத நிலையில் இந்த மனுதாரர் மீண்டும் ஒரு புதிய வழக்கை நீதிமன்றத்தில் சர்வே நம்பர் 201/1 D5 ல் 6.50 ஏர்ஸ் சொந்தம்

என காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமம் மனுவில தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட கிரய பத்திரத்தை தாக்கல் செய்யாமல் கடந்த 30.07.2016 ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவை மட்டும் அடிப்படையாக கொண்டு இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கத்தக்கதல்ல. மனு சொத்திற்கு மனுதாரர் உரிமையாளர் என காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமும் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளார். மேலும் முந்தைய மனுவான அசல் வழக்கு எண.19/2019 மனு நிலுவையிலுள்ள விவரத்தை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் என்பது தகைமைநெறி அடிப்படையில் வழங்கப்படும் ஒரு தீர்வாகும். அதில் உண்மையை மறைத்து முந்தைய மனுவை முற்றிலும் மறைத்து மனு தாக்கல் செய்திருக்கும் மனுதாரருக்கு கிடைக்கதக்கதல்ல. மனுதாரர் கோரியிருக்கும் சொத்து அவருக்கு உரிமையில்லாத நிலையில் அவர் தாக்கல் செய்துள்ள மனுவை இந்த 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4) மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5) இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சணை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**6) <u>தீர்வு:-</u>**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை மற்றும் நிரூபண வாக்குமூலம், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

2. இம்மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவர்களது ஆட்களோ, முகவர்களோ வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் எவ்வித கட்டுமானமும், ஏற்படுத்தக்கூடாது என ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பொதுவாக கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்படும் மனுவில் அதில் முன்னிறுத்தப்பட்டுள்ள மனு உரை சங்கதிகள் மற்றும் ஆவணங்களை முதல் நோக்கிலேயே பார்வையிட்டால் மனுதாரருக்கு ஆதரவான முதற்பார்வை வழக்கு (Prima Facie) அறியப்பட வேண்டும். மேலும் இருதரப்பு சங்கதிகளையும் சீர்தூக்கி சமன் செய்து பார்த்தால் வசதியின் சமநிலை (Balance of convenience) மனுதாரருக்கு சாதகமாக இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி இம்மனு நிராகரிக்கப்பட்டால் அது மனுதாரருக்கு பின்னிட்டு நிவர்த்தி செய்ய முடியாத பெரும் பாதிப்பையோ அல்லது இழப்பையோ (Irreparable injury) ஏற்படுத்தும் என 3 முக்கிய காரணிகளை உள்வாங்க வேண்டியது அவசியமாகிறது.

4. மனுதாரர் தரப்பில் கடந்த 30.07.2016 ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆகவும், கடந்த 16.06.2022 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.2 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. தாவா சொத்தானது வாதியின் தகப்பனாருக்கு பூர்வீக சொந்தமான சொத்து என்றும், அவரது இறப்பிற்கு பின்பு மனுதாரர்/வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும்

இருந்து வருவதாகவும் கூறி ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை 1ம் எதிர்மனுதாரர் மீது அசல் வழக்கு எண்.19/2019 என வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த மனுவில் தான் எதிர்மனுதாரரிடம் கிரயம் வாங்கிய சொத்து சர்வே நம்பர் 201/D5 என கிரயம் பெற்றுள்ளதாகவும் அதன் சர்வே நம்பர் 201/1 D5 என விளம்புகை செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளார். அவர் கிரயம் பெற்றது 201/ D5 அல்லது 201/1 D5 என்பது குறித்து விசாரணை முடிந்து தீர்ப்பு ஏற்படாத நிலையில் மனுதாரர் மீண்டும் ஒரு புதிய வழக்கை சர்வே நம்பர் 201/1 D5 ல் 6.50 ஏர்ஸ் என தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு அவர் உரிமை கோரும் சர்வே நம்பர் 201/1 D5-ல் 6050 ஏர்ஸ் சொந்தம் என காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமும் மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள கூரை வீட்டை அப்புறப்படுத்திவிட்டு அரசு உதவியுடன் புதிய வீடு கட்ட ஏற்பாடு செய்துள்ள நிலையில் அதை தடுக்கும் நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளதாக கூறி எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**7.** மனுதாரர் தரப்பில் மனுதாரரின் தகப்பனார் பொதியப்பன் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு, இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் போன்றவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் கூட, மனு சொத்தானது மனுதாரரின் அனுபவத்தில் உள்ளதா? என்பது குறித்தும், தற்போது வரை மனுதாரர் தான் மனு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறாரா? அல்லது எதிர்மனுதாரர்கள் மனு சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார்களா? என்பது குறித்து வழக்கு விசாரணையின்போது தீர்வு காண்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8.** அசல் வழக்கிலும், இடைநிலை மனுவிலும் கோரப்பட்டுள்ள பரிகாரம் ஒன்றாக இருப்பதால், இந்த இடைநிலை மனுவில் மனுதாரருக்கு அல்லது எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்வு காணப்படும் பட்சத்தில் பிரச்சனைக்குரிய முழுமையான தீர்வினை அடைவது கடினமாகிவிடும். மேலும் இவ்வழக்கின் மூல பிரச்சனையை இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க இயலாது. எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சனைகளை தவிர்க்கவும், இவ்வழக்கின் தரப்பினர்கள் வழக்கு விசாரணையை தொடங்குவதில் பிரச்சனை ஏற்பட்டு விடக்கூடாது என்பதால், நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**7)** **முடிவில்,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பில் :-**

| | | |
|---|---|---|
| 1. ம.சா.ஆ.1 | 30.07.2016 | பட்டா மாறுதல் உத்தரவு சான்றிட்ட நகல். |
| 2. ம.சா.ஆ.2 | 16.06.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு. |
| 3. ம.சா.ஆ.3 | -- | அஞ்சலக ஒப்புதல் அட்டை. |

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மாசித் திங்கள் 06 ம் நாள்

**இடைநிலை மனு எண். 235/2022 -ல்**

**அசல் வழக்கு எண். 69/2022**

திரு.ஜெகநாதன், வயது 53, த/பெ.பொதியப்பன், இந்து, சிவமதம், வசிப்பிடம் சமுதாயம் கிராமம், வல்லூர் ஊராட்சி, பாலையக்கோட்டை அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/வாதி

// எதிர்//

1. திரு.புஷ்பநாதன், வயது 33, த/பெ.பாலசுப்ரமணியன், வசிப்பிடம் சமுதாயம் கிராமம், வல்லூர் ஊராட்சி, பாலையக்கோட்டை அஞ்சல், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலகம், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
3. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர் டவுன், திருவாரூர் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது தாவா சொத்தில் மனுதாரரின் அனுமதியில்லாமல் மனுதாரரின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் எவ்வித கட்டுமானமும் ஏற்படுத்தக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஓர் ஒருதலைபட்ச இடைக்கால உத்தரவு வழங்கி பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 07.07.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 02.08.2022

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்** :

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, வல்லூர் கிராமம்,

புல எண்.201/1D5 -ல் 0.06.50 ஏர்ஸ் புஞ்சை.

**தற்போதைய நான்கெல்லை விபரம்** :

வைத்தி புஞ்சைக்கு கிழக்கு, நம்பியார் புஞ்சைக்கு தெற்கு, பாலசுப்பிரமணியன், புஞ்சைக்கு மேற்கு, ஒழுங்கைக்கு இதற்குட்பட்டது.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.